# சிங்கப்பூரின் வளர்ச்சிக்கு நல்லிணக்கமே அடித்தளம்

## மதியுரை அமைச்சர் லீ குவான் இயூ

வி.ஸ்ரீவித்யா

சிங்கப்பூரின் இந்திய சமூகம், பன்முகமாகி வருவதாக மதியுரை அமைச்சர் லீ குவான் இயூ தெரிவித்துள்ளார்.

"சிங்கப்பூருக்கு, ஹிந்தி போன்ற தமிழ் அல்லாத மொழிகளைப் பேசும் இந்தியர்கள் வருகின்றனர். இதனால் சிங்கப்பூரின் இந்திய சமூகம் பன்முகமாகி வருகிறது," என்றார் மதியுரை அமைச்சர்.



ஸ்ட்ரெயிட்ஸ் டைம்ஸ்

> சிங்கப்பூரின் நல்லிணக்கத்தைக் குலைக்க ஒரு பயங்கரவாதத் தாக்குதல் போதும்.
>
> **- மதியுரை அமைச்சர் லீ குவான் இயூ**

"அவர்கள் அனைவரும் ஒரே இடத்தில் இல்லாமல், நாடெங்கும் பரவி வாழ்வர்.

இதனால், அவர்களது பிள்ளைகள் 'சிங்கப்பூரர்களாக' வளர வாய்ப்புகள் உள்ளன," என்று திரு லீ குறிப்பிட்டார்.

பீஷான் ஆக்டிவ் திடலில் தேசிய ஆரஞ்சு ரிப்பன் கொண்டாட்டத்தை மதியுரை அமைச்சர் நேற்று அதிகார பூர்வமாகத் தொடங்கி வைத்தார்.

சிங்கப்பூரர்களிடம் இன நல்லிணக்கத்தை வளர்க்க இந்த தேசிய ஆரஞ்சு ரிப்பன் கொண்டாட்டம் தொடங்கப்பட்டது.

இதற்கு ஆதரவளிக்க தங்களது உறுதிமொழிகளை அளித்துள்ள 150,000 பேரில் மதியுரை அமைச்சரும் ஒருவர்.

"நிலைத்தன்மை, வளர்ச்சி, முன்னேற்றத்துக்கு இன நல்லிணக்கமே அடித்தளம்," என்பது திரு லீ குவான் இயூ அளித்த உறுதி மொழி.

சிங்கப்பூரின் நிலைத்தன்மைக்கு இன நல்லிணக்கம் மிகவும் முக்கியம் என வலியுறுத்திய அவர், நாட்டின் இன ஒற்றுமையை ஒரு பயங்கரவாதத் தாக்குதல் குலைத்து விடலாம் என்று விளக்கினார் திரு லீ.

"ஒரு மலாய் முஸ்லிம் ஜமா இஸ்லாமியா பயங்கரவாதி சிங்கப்பூரின் ரயில் நிலையம் ஒன்றை வெடிகுண்டால் தகர்த்தால், சீனர்களும் இந்தியர்களும் மலாய்க்காரர்களை எதிரிகளாகப் பார்க்கத் தொடங்கி விடுவர்," என்று ஓர் உதாரணத்தை அவர் சுட்டிக் காட்டினார்.

அவ்வாறு நடக்காமல் இருக்க, சிங்கப்பூரர்கள் ஒற்றுமையுடன் செயல்படுவதே சிறந்தது என மதியுரை அமைச்சர் கூறினார்.

இலங்கையில் சிங்கள மொழிப் பள்ளிகள், தமிழ் மொழிப் பள்ளிகள் எனத் தனித்தனியே இயங்கின. இதனால் இரு சமூகங்களுக்கும் இடையே பிரிவுகள் வளர்ந்தன.

இலங்கை போலன்றி பல மொழி பேசும் மக்கள் வாழும், சிங்கப்பூர் ஆங்கிலத்தையே பிரதான மொழியாக கொண்டுள்ளது. இதனால் அனைத்து இன மக்களும் ஒன்றுபட்டு வாழ முடிகிறது.

அதேநேரத்தில் நான்கு அதிகாரத்துவ மொழிகளுக்கும் சம உரிமை கொடுக்கப் பட்டுள்ளது என்றார் அவர்.

"சிங்கப்பூர் இன்னும் ஒரு முழுமையான 'நாடாக' உருவாக வில்லை. அதற்கு நீண்ட காலம் ஆகலாம். அதற்கு சிங்கப்பூரர்கள் தொடர்ந்து உழைக்க வேண்டும்," என்றும் திரு லீ குறிப்பிட்டார்.